பக்திச் சங்கு

கு. ஸ்ரீநிவாசன்

ஸ்ரீ. வ. ரா. பாரதியைப் பற்றிப் பேசும்போது ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டுவதுண்டு. கதை ஒன்று அவர் சொன்னாராம். பாரதி கேட்டு விட்டு விழுந்து விழுந்து சிரித்தாராம்.

* * *

குடியானவன் வீட்டுக் கொல்லை. பூசணி செழுமையாக வளர்ந்து நிறையக் காய்த்திருந்தது. வந்தான் ஒரு திருடன். நன்றாக முற்றிச் சாம்பல் பூத்த காய்களைப் பறித்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தான். சத்தம் கேட்டுக் குடியானவன் எழுந்து வந்தான். இருட்டில் ஒரு உருவம் தென்பட்டது. பூசணிச் சாம்பல் படிந்து முகம், தலை, உடலெல்லாம் வெண்மையாகத் தோற்றமளித்தன. ''யாரங்கே?'' என்று அதட்டினான். திருடன் புத்திசாலி. கம்பீரமான குரலில், ''பக்தா, இது பூலோகமா?'' என்று பதில் கேட்டான். குடியானவனுக்கு விலவிலர்த்து விட்டது. கைலையிலிருந்து சிவ பெருமானே வந்து விட்டதாக நடுங்கி விட்டான். பக்தா என்று கூப்பிட்ட குரல் அவன் பக்திக் கண்ணைத் திறந்து விட்டது. ''கைலைநாதரே, காப்பாற்ற வேண்டும்!'' என்று காலில் விழுந்தான்.

* * *

''இதுதானா பூலோகம்?''

''ஆம், ஸ்வாமி!''

''நீங்கள்தான் மனுஷ்யர்களா?''

''ஆம், ஸ்வாமி.''

''இந்தக் காய்கள் நல்ல ருசியுள்ளவைகளா?''

''கைலையில் இவை கிடையாதோ?''

''இல்லை.''

''அப்படியானால் இவைகளை நீங்கள் பெற்றுப் போக வேண்டும்.''

''நல்லது. இப்பொழுது நான் அந்தர்த்யானமாக வேண்டும். நீ குடிசைக்குப் போ.''

* * *

குடியானவன் தனது பக்தி பாக்யத்தை வியந்து கொண்டு உள்ளே போனான். ''சிவபெருமான்'' பூசணிக் காய்களுடன் வெளியே போனார்.

* * *

கதை கேட்ட பாரதி, ''பார்த்தாயா, தமிழனின் பக்தி!'' என்று வியந்து வியந்து சிரித்தாராம். அந்த முறையில், தமிழ்நாட்டின் பக்தி உணர்ச்சி பிரஸித்தம்.

* * *

கதை, புராணம், விழா, நாடகம், பாட்டு, கூத்து - எதிலும் பக்தி ரஸம். மிதமிஞ்சின பக்தி; வழிதவறிய பக்தி; ஊசிப்போன பக்தி. பாசி பிடித்த பக்தி.

* * *

சிறுத்தொண்டர் பிள்ளையைக் கறி சமைத்து, சிவனடியார்க்கு அமுதூட்டினார். கண்ணப்பர் கல் விக்கிரகத்துக்குக் கண் நல்கினார். மாணிக்கவாசகர் குதிரை வாங்கக் கொடுத்த பணத்தைக் கொண்டு கோயில் கட்டினார். விசார சருமர் தந்தையின் கால்களைத் துண்டித்தார் - இன்னும் எவ்வளவு விந்தைகள். பக்தி, பக்தி என்று எதற்கும் சமாதானம்.

* * *

பக்திக்கு உதாரணங்கள் இவைகளாக இருக்கும்போது, பக்திப் பிரசாரம் செய்வது இப்பொழுது நாட்டிற்கு நலம் தருமா?

* * *

பக்தி பக்குவமாகும் பொழுது என்ன ஆகிறது பாருங்கள்.

''அநபேக்ஷ : சுகிர்தக்ஷ உதாஸீநோ கதவ்யத:
ஸர்வாரம்ப பரித்யாகி யோ மத்பக்த ஸமே ப்ரிய:

* * *

ஸம: சத்ரௌ சமித்ரே சததா மாநாபமாநயோ:
சீதோஷ்ண சுகதுக்கேஷு ஸம: ஸங்கவிவர்ஜித:
துல்யா நிந்தாஸ்துதிர் மௌனி ஸந்துஷ்டேயே நகேநசித்
அநிகேத ஸ்திரமதிர் பக்திமான் மே பிரியோ நர:

* * *

இது பகவான் கிருஷ்ணன் வாக்கு. பக்தனுடைய லக்ஷணம் என்ன என்று விளக்குகிறார்.

* * *

எதையும் ஆசையுடன் எதிர்பாராதவன், சுத்தமுள்ளவன், எதிலும் விருப்பு வெறுப்பு இல்லாதவன், எதையும் தொடங்காதவன், அவன் எனது பக்தன், எனக்குப் பிரியமானவன்.

எவனுக்கு நண்பனில்லை பகைவனில்லை; சூடில்லை குளிரில்லை; மானமில்லை; அவமானமில்லை சுகமில்லை துக்கமில்லை - அவன் எனது பக்தன், எனக்குப் பிரியமானவன்.

எவனுக்கு நிந்தையும் ஸ்துதியும் ஸமமோ, எவன் மௌனியாக இருக்கிறானோ, எவன் கிடைப்பதைக் கொண்டு திருப்தி அடைகிறானோ, எவன் நிலையின்றி இருக்கிறானோ, எவன் ஸ்திர மதியுடன் நிற்கிறானோ - அவன் எனது பக்தன், எனக்குப் பிரியமானவன்.

* * *

இந்த முறையில் பக்த லட்சணம் விவரிக்கப்படுகிறது. இந்த லட்சணங்களுள்ள பக்தனாக மாற எவ்வளவு பக்தி மார்க்க உபாஸகர்கள் ஆசைப்படுவார்கள்?

* * *

பக்தி மார்க்கத்தை அநுஷ்டிப்பவர்கள், பெண்டு பிள்ளைகள் நன்றாக இருக்க வேண்டும், பெரும் பாக்யத்தை அடைய வேண்டும், பிறரால் கௌரவிக்கப்பட வேண்டும், சக்தி உள்ளவர்களாக இருக்க வேண்டும், சத்துருக்கள் நாசமடைய வேண்டும், மித்திரர்கள் நன்றாக இருக்க வேண்டும், சுகங்கள் பெருக வேண்டும், துக்கங்கள் நீங்க வேண்டும் என்றல்லவோ வேண்டிக் கொள்கிறார்கள்? இவர்கள் உண்மையில் பக்தர்களா? அல்லது கீதையில் அவர்கள் லட்சணம் தப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

* * *

முக்தி வேட்டை இந்த நாட்டின் தனிச் சிறப்பு. வேட்டையில் வெற்றி பெற்றவர்கள் பேசுவதில்லை என்பது ஐதீகம். வெற்றி பெறாமல் வேட்டையாடிக் கொண்டிருப்பவர்கள் சொல்வதில் பல விஷயங்கள் பொருளற்றவையாக இருக்கின்றன. சொல் வலையில் சிக்குண்டு வருந்துவது ஸரியல்ல. விளங்காத பொருளுக்கு விவரம் தருவது விபரீதமேயன்றி வேறில்லை.

* * *

காரைக்குடியில் கம்பர் விழாவிற்குத் தலைமை தாங்கிய ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், ''கம்ப ராமாயணத்தைப் பக்தியுடன் படிக்க வேண்டும். இலக்கியம் என்று ரஸித்தால் பயனில்லை. இலக்கிய ரஸனையால் மமதைதான் வளருமேயன்றி ராமாயணம் படிப்பதன் உண்மைப் பலன் கிடைக்காது!'' என்ற முறையில் பேசினார்.

* * *

சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்தைப் பற்றியும் பிரசாரம் நடந்து வருகிறது. இந்தப் பிரசாரத்தில் கலந்து கொண்ட ஸ்ரீ ஷண்முகம் செட்டியாரும், ஸ்ரீ பக்தவத்ஸலமும் பக்தி ரஸத்தையே அழுத்திப் பேசினார்கள்.

* * *

இது காலந்தவறிய அர்த்தமற்ற பிரசாரம். அவிசல் மாங்காய் கூழின் சுவையைக் கெடுப்பது போல், அர்த்தமற்ற பக்திப் பிரசாரம் கவிதை அழகைக் கெடுத்தும் விடலாம்.

* * *

கவிதை பக்தி உணர்ச்சியில் பிறக்கிறது. வளர்கிறது. ஆனாலும் பக்திக்கே பிணைப்பட்டு நிற்பதில்லை. தனி அழகு பெற்று, தனிச் சிறப்பு அடைந்து, தனிப் பலன் தருகிறது. நீரால் உயிர் பெறும் சாந்துக் கலவை நீர் வறண்டு தனிப் பண்பு பெற்றுத் தனிச் சிறப்பு எய்துதல் போல், பக்தியில் பிறக்கும் இலக்கியம் பக்தி வறண்டு தனி உருப் பெற்றுத் தனிப் பலன் கொடுக்கும். மார்க்கும் லூக்கும் யோவானும் மத்தேயுவும் எழுதியிருக்கும் சுவிசேஷங்கள் அழிவற்ற கவிதைகள். கிறிஸ்துவிடம் பக்தியுடன் தான் அவைகளைப் படிக்க வேண்டுமென்றால் பொருத்தமாகுமா?

* * *

''எந்த வகையில் பக்தியுடன் படிக்க வேண்டும்?'' என்பதை அவர்கள் விளக்கிச் சொன்னால் நல்லதாக இருக்கும். இன்று கவிகளுக்கோ, கதைகளுக்கோ, கதை சொல்பவர்களுக்கோ காட்டப்படும் பக்தி, சில வகைகளில் சரி அன்று.

* * *

புஸ்தகத்திற்குச் சந்தனமிட்டு, குங்குமம் சார்த்தி, தூபதீப நைவேத்தியங்கள் செய்து, சற்று பாராயணம் செய்கிறார்கள். இதை சிலாக்கியமாகச் சொல்ல முடியுமா?

* * *

ஊர் கூட்டி விளம்பரம் செய்து, விருதுகளுடன், மேளதாளம் வாசித்துக் கொண்டு, புஸ்தகத்தை யானை மீது வைத்து ஊர்வலம் வருகிறார்கள். இதுவும் பக்திதான். இது சரியா?

* * *

ராமாயணம் கதை சொல்பவருக்கு, ஸீதா கலியாணத்தன்று வேஷ்டி புடவை கொடுக்கிறார்கள். அங்குலியப்பிரதானத்தன்று மோதிரம் கொடுக்கிறார்கள். பட்டாபிஷேகத்தன்று பலவித மரியாதை செய்கிறார்கள். இவைகள் எல்லாம் பக்தி. இத்தகைய செயல்கள் எப்பொழுதும் யுக்தமானவைகளா?

* * *

இந்தச் செயல்கள் ஆத்மார்த்தமாக எவ்வளவு தூய்மை உள்ளவையாக இருந்தாலும், ஸமூக திருஷ்டியில் பழிப்புக்கு

உட்பட்டவையாக இருக்கின்றன. பாவத்திற்கு விளைநிலமும் ஆகிவிடுகின்றன.

* * *

பக்தனுக்கும் பகவானுக்கும் உள்ள உறவாக இருக்கும் வரையில் பக்தியைப் பற்றிக் குறை கூற முடியாது. பக்தனுக்கும் பக்தனுக்கும் அதனால் உறவு ஏற்படும் போது சிக்கல் உண்டாகிறது. தெரிந்த பக்தனுக்கும் தெரியாத பக்தனுக்கும் தொடர்பு ஏற்படும் போது நிலைமை கவனிக்கத் தக்கதாகி விடுகிறது. தெரிந்தவன் திருடனாகவும், தெரியாதவன் மூடனாகவும் வாய்த்து விட்டால், ''சிவபக்தி கூஷ்மாண்ட நஷ்டம்'' என்று ஏற்பட்டு விடுகிறது. நஷ்டமாவது பூசணிக்காய் மட்டுமல்ல. பொருள், அறிவு, மானம், பௌருஷம் அத்தனையும் பறிபோக ஸந்தர்ப்பம்.

* * *

பக்தியோடு படிப்பதுதான் பிரதானம் என்றால், கம்பன் கவி என்ன விசேஷம்? எந்தப் புஸ்தகத்தை வேண்டுமானாலும் பக்தியுடன் படிக்கலாம். பக்தியின் பலன் கிடைக்கும். கல்லால் எறிந்தாலும், வில்லால் அடித்தாலும், செருப்பால் உதைத்தாலும், பக்தன் செயலில் பரமன் திருப்தி அடைந்து விடுகிறார் என்பது புராண ஸித்தாந்தம். விக்ருதி வருஷப் பஞ்சாங்கத்தைக் கூட ராம பக்தியுடன் படித்தால் ராமப்பிரஸாதம் கிடைத்துவிடும்.

* * *

கம்பன் கவிதைகளில் களிப்பதற்கோ, தியாகய்யர் கிருதிகளில் திளைப்பதற்கோ, ராம பக்தி அவசிய மென்றால் தமிழ் கிறிஸ்தவர்களுக்கு, முஸ்லிம்களுக்கு, சைவர்களுக்கு அது எப்படி முடியும்?

* * *

கலைச் செல்வங்களை ரஸிக்க கடவுள் உணர்ச்சி அவசியம் என்று சொல்லலாமா? இரண்டும் இணைந்தால் இன்பம் இரு மடங்கு என்று காட்டலாம். ஆயினும் மனித வர்க்கத்தின் வளர்ச்சியில் கலை உணர்ச்சியும், கடவுள் உணர்ச்சியும் வெகுவாகப் பிளவுபட்டு, மாறுபட்டு விட்டன. அவைகளை வலிய இணைப்பது வீண் முயற்சி. அதுவும் கடவுள் போர்வையில்

கள்ளத்தனம் பெருகிவிட்ட இடத்தில், கலைச்செல்வத்தைக் கடவுள் உணர்ச்சியுடன் பிணைப்பது கள்ளத்தனத்திற்குத் துணை செய்தது போல் ஆகும்.

* * *

கம்ப ராமாயணத்தைப் பக்தர்கள் ஆதீனத்தில் விட்டுவிட்டால் கம்பனும் இருக்க மாட்டான்; ராமனும் இருக்க மாட்டான். பக்தர்களின் சேஷ்டைதான் மிச்சம் இருக்கும். ராமன் வட கலையா, தென் கலையா என்று வந்துவிடும். ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வரும் வரையில், புஸ்தகம் கிடைக்காது. படிக்கக் கூடாது என்று இன்ஜங்ஷன் கூடப் பிறந்துவிடும்.

* * *

கம்ப ராமாயணத்தின் பெருமை அதன் கவிதை நயம்தான். ராம பக்தி என்பது இரண்டாம் பக்ஷம். அப்படி அன்று, கம்ப ராமாயணத்தை ராம பக்தியுடன்தான் படிக்க வேண்டும், பக்தி உணர்ச்சியே பிரதானம் என்று சொன்னால், அது காவ்யக் கலைக்கு இழுக்குச் செய்ததாகும்.

* * *

ஜிலேபியின் ருசி ஜீராவின் பதத்தினால் ஏற்படுவது. உளுந்தின் புஷ்டித் தன்மையை விரும்புபவர்களுக்கு இட்டலி இருக்கிறது, வடை இருக்கிறது. பச்சை மாவை வைத்துக் கொண்டு டாங்கர் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

– 1950